அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS













# தமிழ் ஆண்டு 12

# செப்பனிடப்பட்ட வரலாற்றுப் பாடங்கள்









# தமிழ்

## ஆண்டு 12

## TAMIL YEAR 12




அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# 7 ஈழத்தமிழர் வரலாறு

பிரித்தானியரின் தவறான புரிதல் காரணமாகவும் தமது நலனை முன்னிறுத்தியும் அவர்களால் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களால், தமிழர் தேசத்தை தமிழரின் ஒப்புதலின்றி சிங்கள தேசத்துடன் வல்லிணைப்புச் செய்தனர். அதன் காரணமாக சிங்கள ஆட்சியாளர்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தித் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அழிக்கத்தொடங்கினர். இது பிரித்தானியர் ஈழத்திலிருந்து நீங்கிச்சென்ற பின்னர் மேலும் தீவிரமடையத் தொடங்கியது. இதனால், ஈழத்தமிழர்கள் இழந்த தமது தாயகத்தை மீட்பதுதான் ஒரே தீர்வு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு அமைய 1977இல் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துத் தமிழ்ப் பகுதிகளில் பெருவெற்றி பெற்றதை அடுத்து, தமிழர் தேசத்துக்கு வெளியே வாழும் ஈழத்தமிழர் பெருமளவானோர் சிங்கள அரசின் ஆதரவோடு சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஈழத்தமிழர் வரலாற்றில் மேலும் ஒரு கறைபடிந்த நாளாக 1981 மே 31ஆம் நாள் அமைந்தது. இந்நாளில் சிங்கள அரசினால் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. பல்லாயிரம் நூல்களும் பழைய ஏட்டுச்சுவடிகளும் செய்தித்தாள் தொகுதிகளும் எரிந்து சாம்பலாகின. இந்நிகழ்வு 20ஆம் நூற்றாண்டின் கலாசார இன அழிப்புகளுள் ஒரு மிகப்பெரும் அழிப்பாகக் கருதப்படுகிறது. இவ்வழிப்பு நடந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் கிட்டத்தட்ட 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்தது.



1981 மே 31ஆம் நாள் எரியூட்டப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம்

1983இல் நடைபெற்ற வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகளில் 53 தமிழ் அரசியல் கைதிகள் சிங்கள அரசின் ஏற்பாட்டில் படுகொலை செய்யப்பட்டனர். அத்தோடு யூலை 1983இல் தமிழர்களுக்கு எதிராக மிகக்கொடுமையான இன அழிப்புத் தாக்குதல்கள் சிங்கள அரசால் நடத்தப்பட்டன. இப்படுகொலைகள் ‘கறுப்பு யூலை’ என அடையாளப்படுத்தப்பட்டு, தமிழர்களால் நினைவுகூரப்பட்டு வருகின்றன.

தமிழரின் சுயநிர்ணய உரிமைகளுக்கான போராட்டத்தில் கட்சிகள் மற்றும் விடுதலை இயக்கங்கள் என்பன முனைப்புடன் செயற்படத் தொடங்கியதால், இவ்விடயத்தில் தமது நலன் கருதி வெளிநாடுகளும் தலையிடத் தொடங்கின.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் வெளிநாட்டுத் தலையீடுகளின் ஒருகட்டமாக இந்தியா இதில் தலையிட்டு, 1985 யூலை 8ஆம் நாள் பூட்டானின் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தியது. இப்பேச்சுவார்த்தையில் தமிழ் அமைப்புகள் பின்வரும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருந்தன.

1. ஈழம் வாழ் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்
2. வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் தாயகம்
3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றல்
4. ஈழத்தை வாழ்விடமாகக் கொண்ட அனைவருக்கும் குடியுரிமை வழங்கல்

ஆயினும், சிங்கள அரசால் இக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனைத் தொடர்ந்து 1987 யூலை 29ஆம் நாள் இந்தியாவின் முயற்சியினால் இலங்கை, இந்தியாவின் நலன்களுக்கு ஏற்ப, அவற்றிற்கிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் இலங்கையின் சனாதிபதி யே.ஆர். செயவர்த்தனா, இந்தியப் பிரதமர் ராசீவ்காந்தி ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டது. ஆயினும், தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை உள்ளடக்காது மேற்கொள்ளப்பட்ட இவ் ஒப்பந்தத்தைக்கூட சிங்கள அரசு வலுவிழக்கச்செய்தது. இவ்வொப்பந்தத்திற்கு அமைவாக 1987இல் தமிழீழப் பகுதிக்குள் வந்த இந்திய இராணுவம் மேலும் தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாகியது.

தியாகதீபம் திலீபன் (இராசையா பார்த்தீபன்) அவர்கள் 1987 செப்ரெம்பர் 16 முதல் 26 வரை யாழ்ப்பாணத்தில் இந்திய அரசிடம் பின்வரும் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாநோன்பிருந்தார்.

1. பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் சிறிலங்காவின் சிறைகளில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
3. இடைக்கால அரசு அமைக்கப்படும் வரை புனர்வாழ்வு என்ற பெயரில் நடத்தப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காவல் நிலையங்கள் திறக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5. ஊர்காவற் படைகளின் ஆயுதங்கள் மீளப்பெறப்பட்டு, பாடசாலைக் கட்டடங்களில் உள்ள இராணுவம் மீளப்பெறப்பட வேண்டும்.



தியாகதீபம் திலீபன்
(இராசையா பார்த்தீபன்)



அன்னை பூபதி

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலே திலீபன் அவர்கள் வீரச்சாவடைந்தார். தொடர்ந்து அன்னை பூபதி அவர்கள் ''தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை நிறுத்த வேண்டும், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்'' ஆகிய கோரிக்கைகளை இந்திய அரசிடம் முன்வைத்து, மட்டக்களப்பில் 1988 மார்ச் 19 முதல் ஏப்ரல் 19 வரை 31 நாள்கள் உண்ணாநோன்பிருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலே சாவடைந்தார்.

1987 முதல் தமிழர் தேசத்தில் நிலைகொண்டு, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமாகிய இந்திய இராணுவம், இலங்கை சனாதிபதி பிறேமதாச அவர்களின் உத்தரவை அடுத்து 1990 மார்ச் மாதத்தில் இந்தியா திரும்பியது.

1990களிலிருந்து தமிழீழத்தின் பெரும்பகுதி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. இப்பகுதிகளில் தமிழீழ நிகழ் அரசு இயங்கிவந்தது.

சமாதானத்தை முன்வைத்து 1994இல் இலங்கை சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையான பேச்சுவார்த்தை 1995 யனவரி 3இல் தொடங்கியது. ஆயினும், இப்பேச்சுவார்த்தையும் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் எட்டாமல், ஏப்ரல் 1995இல் பயனின்றி நிறைவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து, யாழ்க்குடாநாட்டில் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காரணமாக உயிர் அச்சத்திற்கு உள்ளான ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் 1995 ஒக்டோபர் 30அன்று ஒரே நாளில் யாழ்க்குடாநாட்டின் வலிகாமம் பகுதியை விட்டு இடம்பெயர்ந்தனர். இவ் இடப்பெயர்வு தெற்காசியாவில் ஒரே நாளில் இடம்பெற்ற மிகப்பெரிய இடப்பெயர்வாகக் கொள்ளப்படுகிறது.

2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று இலங்கையில் புதிய அரசு உருவானதும், நோர்வேயின் அனுசரணையுடன் சிங்கள அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை 2002 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்டது. இவ் உடன்படிக்கையில் ஆயுதப் பயன்பாடுகளை முடிவிற்கு கொண்டு வருதல், நீண்ட காலத் தீர்வை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும், அப்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஆனால், இப்புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் வாயிலாக அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளும் முடிவேதும் எட்டப்படாமல் சிங்கள அரசினால் செயலிழக்கச் செய்யப்பட்டன.

தமிழரின் தாயக மீட்புப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இராணுவ நடவடிக்கைகளைச் சிங்கள அரசு தொடர்ந்தது. 2005 தொடக்கம் 2009 மே மாதம் வரை தொடர்ந்த போரில் பல்லாயிரம் தமிழ் மக்கள் இலங்கைப் படைகளின் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தாக்குதல்களில் 2006 ஆகத்து 14ஆம் நாள் செஞ்சோலை வளாகத்தில் சிங்கள வான்படையினரால் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறிப்பிடத்தக்கதாகும். இதில் 16 முதல் 18 அகவை வரையான பள்ளி மாணவிகள் 61 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

தமிழர் தாயக மண்மீட்புப் போர் நடந்த காலத்தில் தாயகத்திலும், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் தமிழர் தாயக மீட்புப் போருக்கு ஆதரவாகவும் தமிழின அழிப்புக்கு எதிராகவும் பொங்குதமிழ் நிகழ்வுகள், பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பன அமைதிவழியில்தமிழ்மக்களால்நடத்தப்பட்டன என்பதுவும்குறிப்பிடத்தக்கதாகும்.

2008 முதல் 2009 மே 18 முள்ளிவாய்க்கால் வரை மட்டும் 70,000 வரையான தமிழ்மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இன்னும் அதிகமாகும் எனவும் இவ்வாறு சிங்கள அரசால் நடத்தப்பட்ட தமிழினப்படுகொலையானது ஓர் இனப்படு கொலையெனவும் 2013 டிசம்பர் 7 முதல் 10ஆம் நாள் வரை யேர்மன் பிறெமனில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதன் பின்னரும் இன்றுவரை தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியும் வழங்கப்படவில்லை. அத்தோடு கட்டமைக்கப்பட்ட வகையில் தமிழின அழிப்பு பல்வேறு வடிவங்களில் சிங்கள அரசுகளால் இன்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதற்கு எதிராகத் தமிழ் மக்கள் தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அரசியல் முன்னெடுப்புகளையும் அமைதிவழிப் போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழர்களால் ஆண்டுதோறும் யூலை மாதம் ஏன் 'கறுப்பு யூலை' என அடையாளப்படுத்தப்பட்டு நினைவு கூரப்பட்டு வருகிறது?
2. தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் ஏன் வெளிநாடுகள் தலையிடத்தொடங்கின?
3. திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எவை?
4. ஈழத்தில் தமிழினத்திற்காக உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்தோர் யாவர்?
5. தெற்காசியாவில் ஒரே நாளில் இடம்பெற்ற மிகப்பெரிய இடப்பெயர்வாகக் கொள்ளப்படுவது எது?
6. நோர்வேயின் அனுசரணையுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றி எழுதுக.
7. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எப்போது எரிக்கப்பட்டது?
8. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதால் தமிழினத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் எவை?
9. பொங்குதமிழ் நிகழ்வுகள் எங்கு நடத்தப்பட்டன?
10. விளக்குக:

    வல்லிணைப்பு — கோரிக்கை

    சுயநிர்ணய உரிமை — அமைதிவழிப் போராட்டம்